# அரையாண்டுத் தேர்வு - 2024

**வகுப்பு: 12**

## வணிகவியல்

மொத்த மதிப்பெண்கள்: 90

நேரம்: 3.00 மணி

பிரிவு – I

(20*1=20)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்

1. வேலையை பல்வேறு சிறு பணிகளாக பிரிப்பதை ________ என்பர்.
   அ) ஒழுங்கு  ஆ) பயன்பாடு இ) வேலைப்பகிர்வு ஈ) சமத்துவம்
2. __________ன் உதவியுடன் இலக்குகள் அடையப்படுகின்றன
   அ) செயலூக்கமளித்தல்  ஆ) கட்டுப்படுத்துதல்  இ) திட்டமிடுதல்  ஈ) பணியமர்த்துதல்
3. மூலதன சந்தை -------ஐ வழங்குவதில்லை
   அ) குறுகிய கால நிதி ஆ) கடனுறுதி பத்திரங்கள் இ) சமநிலை நிதி ஈ) நீண்ட கால நிதி
4. பணச் சந்தையில் முக்கிய பங்காற்றும் அமைப்பு _________
   அ) வணிக வங்கி  ஆ) இந்திய ரிசர்வ் வங்கி  இ) பாரத ஸ்டேட் வங்கி  ஈ) மைய வங்கி
5. நம்பிக்கையுள்ள ஊகவணிகர்கள் என்பவர்
   அ) மான் ஆ) கரடி இ) காளை  ஈ) வாத்து
6. செபியின் தலைமையகம் ________ ஆகும்.
   அ) கல்கத்தா  ஆ) மும்பை  இ) சென்னை  ஈ) தில்லி
7. மனித வளம் என்பது ஒரு ____________ சொத்து.
   அ) கண்ணுக்கு புலனாகும்  ஆ) கண்ணுக்கு புலனாகா  இ) நிலையான  ஈ) நடப்பு
8. தேர்வு பொதுவாக ஒரு ___________ செயலாக கருதப்படுகிறது.
   அ) நேர்மறை  ஆ) எதிர்மறை  இ) இயற்கை  ஈ) இவை ஏதும் இல்லை
9. சந்தையிடுகையில் சந்தையிடுகையாளர் முதலில் தெரிந்து கொள்ள விரும்புவது.
   அ) வாடிக்கையாளரின் தகுதி  ஆ) பொருளின் தரம்
   இ) வாடிக்கையாளரின் பின்புலம்  ஈ) வாடிக்கையாளரின் தேவைகள்
10. தூய சில்லரை விற்பனையாளர் என அழைக்கப்படுவர்
    அ) சந்தை உருவாக்குநர்கள்  ஆ) நடவடிக்கை தரகர்கள்  இ) வியாபாரிகள்  ஈ) முகவர்கள்
11. "நுகர்வோரியல்" எனும் சொல் தோன்றிய ஆண்டு
    அ) 1960  ஆ) 1957  இ) 1954  ஈ) 1958
12. நவீன சந்தையியலின் இறுதியான நோக்கம் ______________.
    அ) அதிகமான இலாபம் ஆ) குறைவான இலாபம் இ) நுகர்வோர் திருப்தி ஈ) சமுதாயத்திற்கு சேவை
13. இரண்டு முக்கிய வாணிபச் சூழல்கள்____மற்றும்____ஆகும்.
    அ) நேர்மறை மற்றும் எதிர்மறை  ஆ) உட்புறச் சூழல் மற்றும் வெளிப்புறச் சூழல்
    இ) நல்லது மற்றும் கெட்டது  ஈ) அனுமதிக்கக்கூடியது மற்றும் அனுமதிக்க முடியாதது
14. சரக்கு விற்பனைச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு  அ. 1940  ஆ. 1997  இ. 1930  ஈ. 1960
15. மாற்றுமுறை ஆவணச்ச ட்டம் 1881 பிரிவு 6 எதைப் பற்றி இயம்புகிறது?
    அ. கடனுறுதிச் சீட்டு  இ. மாற்றுச் சீட்டு  ஆ. காசோலை  ஈ. மேற்கூறிய எதுவுமில்லை
16. ஒரு பொது நிறுமத்தில் குறைந்தது ___ இயக்குனர்கள் இருக்க வேண்டும்
    அ) ஏழு  ஆ) ஐந்து  இ) மூன்று  ஈ) இரண்டு
17. ___________கூட்டம் நிறுமத்தின் வாழ்நாளில் ஒரு முறை மட்டுமே கூட்டப்படும்.
    அ) சட்டமுறை  ஆ) ஆண்டுப்பொது  இ) சிறப்பு  ஈ) வகுப்பு
18. பொருத்துக:
    1) இடமாற்றம் - i) அக வளம்
    2) விளம்பரங்கள் - ii) புற வளம்
    3) கட்டமைக்கபட்ட நேர்காணல் - iii) வினாக்கள் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டது
    4) கட்டமைக்கபடாத நேர்காணல் - iv) வினாக்கள் முன்கூட்டியே தீர்மானிக்கப்படாதது

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| அ) | I | ii | iii | iv |
| ஆ) | ii | iii | iv | i |
| இ) | iv | iii | I | ii |
| ஈ) | iii | I | ii | iv |

19. கூற்று (A): 1934ஆம் ஆண்டில் வாழ்ந்த ஹீம் பீட்டர் தொழில் முனைபவரை புதின படைப்பாளி என அழைத்தார்.

காரணம் (R): அவரின் கருத்துப்படி தொழில்முனைபவர் ஒரு படைப்பாளியாக சீரான முறையில் ஏதேனும் ஒரு புதுமையை புகுத்த வேண்டியது அவசியமாகிறது என்கிறார்.

அ) A மற்றும் R சரி மேலும் R என்பது A யிற்கான சரியான விளக்கம்

ஆ) A மற்றும் R சரி மேலும் R என்பது A யிற்கான தவறான விளக்கம்

இ) A சரி ஆனால் R தவறு ஈ) A தவறு ஆனால் R சரி

20. பொருந்தாத ஒன்றை கண்டறிக. அ) ஊரகத் தொழில் முனைவோர்

ஆ) தனி உரிமை தொழில் முனைவோர் இ) அரசு தொழில்முனைவு ஈ) இணை தொழில்முனைவு

## பிரிவு – II (7*2=14)

குறிப்பு: ஏதேனும் ஏழு கேள்விகளுக்குப் பதிலளிக்கவும். வினா எண். 30 ற்கு கட்டாயமாக பதிலளிக்கவும்.

21. மேலாண்மைக் கருவிகளைப் பட்டியலிடுக
22. மூலதனச் சந்தையின் பங்கேற்பாளர்கள் யார்?
23. செபி பற்றிய சிறுகுறிப்பு வரைக
24. ஆட்சேர்ப்பின் பொருள் தருக.
25. தரப்படுத்துதல் என்றால் என்ன?
26. நுகர்வோர் என்பவர் யார்?
27. உட்புறச் சூழல் என்றால் என்ன?
28. சரக்கு விற்பனை ஒப்பந்தத்தின் அடிப்படைக் கூறுகளைப் பட்டியலிடுக.
29. முழுநேர இயக்குனர் என்பவர் யார்?
30. ஒரு நிறுமம் தனது பழைய பங்குதாரர்களுககு எந்தவிதமான மறுபயன் எதிர்பாராமல் வெளியிடப்படும் பங்கின் பெயர் என்ன?

## பிரிவு – III (7*3=21)

குறிப்பு: ஏதேனும் ஏழு கேள்விகளுக்குப் பதிலளிக்கவும். வினா எண். 40 ற்கு கட்டாயமாக பதிலளிக்கவும்.

31. குறியிலக்கு மேலாண்மையின் இயல்புகளை எழுதுக. (ஏதேனும் மூன்று)
32. இரண்டாம் நிலைச்சந்தை – சிறு குறிப்பு வரைக.
33. கருவூல இரசீதின் ஏதேனும் மூன்று வகைகளை விவரி.
34. காளை மற்றும் கரடி - விளக்குக.
35. மன அழுத்த நேர்காணல் என்றால் என்ன?
36. தனியிடச்சந்தை பற்றி எழுதுக.
37. செயற்கைப் பற்றாக்குறை என்றால் என்ன?
38. தொழில்நுட்ப சூழல் பற்றி நீவிர் அறிவது யாது?
39. சிறப்பு தீர்மானம் என்றால் என்ன?
40. இந்தியாவில்பசுமைத் தொழில் மற்றும் சேவை தொழில் அமைப்பதற்காக 2015ஆம் ஆண்டு துவங்கப்பட்ட திட்டத்தின் பெயர் என்ன??

## பிரிவு – IV (5*7=35)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்

41. நவீன மேலாண்மைக் கோட்பாடுகளை விவரி. (ஏதேனும் ஐந்து) (அல்லது)
    பங்குகள் மற்றும் கடன் பத்திரங்கள் இடையே உள்ள வேறுபாடுகள் (ஏதேனும் ஐந்து)
42. ஏதேனும் ஐந்து அரசின் தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டத்தினை விளக்குக. (அல்லது)
    மேலாண்மையின் முக்கிய பணிகளை கூறி விளக்குக. (ஏதேனும் ஐந்து)
43. செபியின் பணிகளை விவரி. (ஏதேனும் ஐந்து) (அல்லது)
    பயிற்சியின் பல்வேறு முறைகளை விவரி. (ஏதேனும் ஐந்து)
44. பணச்சந்தை மற்றும் மூலதனச்சந்தை இவை இரண்டிற்கும் இடையிலான வேறுபாடுகளை விவரி. (அல்லது)
    சந்தையிடுகை கலவையின் கூறுகளை குறிப்பிடுக
45. மனித வளத்தின் சிறப்பியல்புகளை எழுதுக. (ஏதேனும் ஐந்து) (அல்லது)
    வியாபாரத்தின் நுண்ணிய சூழல் காரணிகளை விளக்குக. (ஏதேனும் ஐந்து)
46. நுகர்வோரின் கடமைகளை விளக்குக (ஏதேனும் ஐந்து ) (அல்லது)
    பல்வேறு வகையான நிறும கூட்டங்களை விளக்குக.
47. காசோலை மற்றும் மாற்றுச்சீட்டினை வேறுபடுத்துக. (அல்லது)
    பணிசார் தொழில்முனைவோரின் தன்மையை விவரி.